# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 11.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6316/D/2019**

Thiru.C.A. Shanmukhavel --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலர்,
தொழில்துறை, தலைமைச் செயலகம், --- பொது அதிகார அமைப்பு
சென்னை - 600 009.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 28.12.2018 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 06.02.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 10.01.2019 & 05.03.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.04.2019 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 10.05.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 04.07.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் Thiru. C.A.Shanmukhavel மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு.V.சுப்ரமணியன், அரசு சார்புச் செயலர், தொழில் துறை, தலைமைச் செயலகம், சென்னை இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் சென்னை தலைமைச் செயலக தொழில்துறை அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கோப்பு எண்.7295/MMC II/99 தொடர்பான, கோப்பின் முழு நகலினை தகவலாக வழங்கக் கோரியுள்ளார்.

3. இவ்வாணையத்தின் 16.09.2020 நாளிட்ட விசாரணையில் கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன :-

*4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் குறிப்பிட்டுக் கோரும் ஆவணங்கள் பொது அதிகார அமைப்பின் வசமில்லை என்றும் இது குறித்த தகவல் மனுதாரருக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது என்றும், இப்பொருள் தொடர்பான ஆவணங்களை தேடிப்பார்க்க கால அவகாசம் வேண்டுமென்றும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.*

*5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, பொதுத் தகவல் அலுவலர் கால அவகாசம் கோரியதைக் கருத்தில் கொண்டு இவ்வழக்கின் தொலைபேசி வாயிலான விசாரணை எதிர்வரும் 07.10.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் தலைமைச் செயலக தொழில்துறை அலுவலக அரசு சார்பு செயலாளர் / பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.*

4. இவ்வாணையத்தின் 07.10.2020 நாளிட்ட விசாரணையில் கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன :-

*4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரருக்கு நாளதுவரை தகவல்கள் வழங்காத காரணத்தினால் மீண்டும் இவ்விசாரணையை எதிர்வரும் 11.11.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் தலைமைச் செயலக தொழில்துறை அலுவலக அரசு சார்பு செயலாளர் மற்றும் மனுதாரர் ஆகியோர் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.*

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தான் கோரிய தகவல்கள் தொடர்பாக ஆணையத்தின் Whatsapp எண்ணில் ஆவணங்களை தாக்கல் செய்து, இவ்வாவணங்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் விவரத்தை தகவல்களாக பெற்று வழங்குமாறு கோரினார். இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்குவதாக தெரிவித்தார்.

6. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரால் ஆணையத்தில் சமர்பித்த எழுத்துப் பூர்வமான ஆவணத்தை பொதுத் தகவல் அலுவலருக்கு இணைத்து அனுப்பப்படுகிறது. அந்த ஆவணத்தை பரிசீலனை செய்து எடுக்கப்பட்ட நடவடிக்கையை பதினைந்து நாட்களுக்கு அறிக்கையாக ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென உத்திரவிடப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் என்று தலைமைச் செயலகத் தொழில்துறை அலுவலக அரசு சார்பு செயலாளருக்கு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6316/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலர்,
தொழில்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009. (இ)

**<u>மனுதாரர்:-</u>**

Thiru.C.A. Shanmukhavel,
2B, Yasin Galaxy Apartment,
679, Fourth Cross Street,
West K.K.Nagar, Madurai – 625 020.

Copy to: File
SNPA 20.11.2020